சிசு திரிய



தரம் - 04

தமிழ் மொழி, கணிதம்,
சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

பெயர்: .....

பாடசாலை : .....

ஆரம்பப்பிரிவு
வலயக் கல்விக் காரியாலயம்
கம்பளை

www.ikedu.lk


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
zoom
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

தமிழ் மொழி - 4

செயலட்டை – 1

பின்வரும் ஒளிப்படத்தைப் பார்த்து நிகழ்காலத்தில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது ஐந்து சொற்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்)



1. .....

.....

2. .....

.....

3. .....

.....

செயலட்டை – 2

பின்வரும் காட்சிப்படத்தைப் பார்த்து மூன்று வாக்கியங்கள் எழுதுக. (நிகழ்காலத்தில்)



1. .....

.....

2. .....

.....

3. .....

.....

1. பின்வரும் வினாக்களில் உள்ள புள்ளிக்கோடிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. **மீனவனுக்கு** கடல் போன்று விளையாடுபவனுக்கு .....
   1. மைதானம் 2.பந்து 3.துடுப்பு

2. **ஆசிரியருக்கு** மாணவன் போன்று மருத்துவனுக்கு .....
   1. பொதுமக்கள் 2.நோயாளி 3.தாதி

3. **பசிக்கு** உணவு போன்று நோய்க்கு .....
   1.வைத்தியசாலை 2.வைத்தியர் 3.மருந்து

4. **விமானத்திற்கு** விமானி போன்று கப்பலுக்கு .....
   1.மாலுமி 2.சாரதி 3.மீகாமன்

5. **நூலகத்திற்கு** நூல்கள் போன்று பேருந்துக்கு .....
   1.வியாபாரிகள் 2.நடத்துநர் 3.பயணிகள்

www.lkedu.lk

செயலட்டை – 3

பலா மரமும் அது தரும் பயன்களும்

- பலா மரம் நிழல் தரும்.
- பறவைகளுக்கும் பிராணிகளுக்கும் உறைவிடமாகிறது.
- காற்றின் அதீத வேகத்தை கட்டுப்படுத்துகிறது.
- வேர்களோ நில அரிப்பைத் தடுத்து மண்ணின் ஈரத்தன்மையைப் பேணுகின்றன.
- இலைகள் பிராணிகளுக்கு உணவாகப் பயண்படுகின்றன.
- வீடு கட்டவும், தளபாடங்கள் செய்யவும் உதவுகின்றன.
- விறகுக்கு பயன்படுகிறது.
- கனிகள், காய்கள், விதைகள் என உணவுக்கு பயன்படுகின்றன.
- பாலூட்டும் தாய்மார்களுக்கு சிறந்த உணவாகும்.

1. இதை பார்த்து எழுதி மனனம் செய்யவும்.

2. பயன்தரும் மரங்களின் பெயர்களை எழுதுக.

.....

3. நீங்கள் எழுதிய மரங்களின் பயன்கள் மும்மூன்று எழுதுக

.....

.....

.....

www.ikeau.lk

02. பின்வரும் சொற்களின் கருத்தை இனங்கண்டு தொடர்பு படுத்துவோம்.

1. இருவிளக்கு	சந்திரனின் பாகம்
2. தூயவொளி	பதினாறு
3. அமுதவொளி	சூரியனும், சந்திரனும்
4. கலை	ஆகாயம்
5. எண்ணிரண்டு	குளிர்ந்த இனிய வெளிச்சம்
6. விசும்பு	வெண்மையான வெளிச்சம்

செயலட்டை – 4

சேவகனின் ஆழ்ந்த சிந்தனை.

1) பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைப்போம்.

1. வெளியூர் :- .....

.....

2. சேவகன் :- .....

.....

3. நித்திரை :- .....

.....

4. நள்ளிரவு :- .....

.....

5. மகிழ்ச்சி :- .....

.....

www.lkedu.lk

செயலட்டை – **5**

தோமஸ் அல்வா எடிசன்.

பொருத்தமான விடையை அடைப்பில் இருந்து தெரிவு செய்து எழுதுக.

பாராட்டுகளைப் , மின்சாரக்குமிழ் , 1876 ல்
ஒஹையோ , அச்சகமாக , வியாபாரி ,
தாயிடம் , எண்பத்து நான்காவது, சோதித்து

1) தோமஸ் அல்வா எடிசன் ..... மாநிலத்தில் பிறந்தார்.
2) அவர் .....,..... தான் பாடம் கற்றார்.
3) பார்க்கும் எதையும் ..... அறியும் ஆர்வம் சிறுவயதில் இருந்தே அவருக்கு உண்டு.
4) ரயில் பெட்டியையே..... மாற்றினார்.
5) ஒரு சாதனையை நிகழ்த்திய பிறகு அதற்கான. ..... பெற அவர் அங்கே இருக்க மாட்டார்.
6) தோமஸ் அல்வா எடிசனின் தந்தை ஓர் ..... ஆவார்.
7) தோமஸ் அல்வா எடிசன் .....வயதில் மறைந்தார்.
8) உலக வரலாற்றில் அதிக ..... சொந்தக்காரர் ஆவார்.
9) ..... , கிராமபோன் போன்றவை இவரது கண்டுபிடிப்புகளில் குறிப்பிடத்தக்கவை.
10) .....ஆராய்ச்சிக்கூடம் அமைத்தார்.

www.kedu.lk

செயலட்டை – 6

சிட்டுக் குருவிகள்

கிராமம், நகரம், பூங்கா, மரம், செடி, கொடி என எங்கு வேண்டுமானாலும் கூடு கட்டி வாழும்.

சிட்டுக் குருவிகள் சிறு சிறு கூட்டங்களாக வசிக்கும்.

ஆண் குருவிகளுக்கு சாம்பல் நிறத்தில் சிறிய கொண்டை இருக்கும்.

பெண் குருவிகளுக்கு கொண்டை இருக்காது.

சிட்டுக் குருவிகளின் ஆயுட்காலம் சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் ஆகும்.



தங்களுக்குள் சிறிய சத்தங்கள், இடைவிடாத கீக்சுச் குரல்கள் மூலம் மற்றைய குருவிகளைத் தொடர்பு கொள்கின்றன.

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. சிட்டுக்குருவிகள் எங்கெல்லாம் வாழும்?

.....

2. ஆண் குருவியை எவ்வாறு இணங்காணலாம்?

.....

3. கொண்டை இல்லாத குருவி எது?

.....

4. சிட்டுக் குருவியின் ஆயுட்காலம் எவ்வளவு?

.....

5. இவை எவ்வாறு மற்றைய குருவிகளுடன் தொடர்பு கொள்ளும்?

.....

www.ikeet.lk

செயலட்டை – 7

அதியமான் கனி

தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

1) நெல்லியின் இரு வகைகளும் எவை?

   1) .....

   2) .....

2) நெல்லியில் உள்ள சத்துக்கள் எவை ?

.....

.....

.....

3) நெல்லியில் காணப்படும் சுவைகள் எவை?

.....

.....

.....

4) நெல்லியில் இருந்து கிடைக்கும் நன்மைகள் எவை?

.....

.....

.....

5) ஆயுர்வேத , யுனானி மருத்துவ முறைகளில் நெல்லியின் எப்பகுதிகள் பயன்படுத்தப்படுகின்றன?

.....

.....

.....

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

செயலட்டை – 8

வண்ணக் கோலங்கள்.



பெற்றோரின் உதவியுடன் செய்யவும்.

* முதலில் குவளை ஒன்றும், உணவுச்சாயம் மூன்றும் எடுத்துக் கொள்ளுங்கள்.

* கண்ணாடிக் குவளையை முற்று முழுதாக நீரினால் நிரப்பிக் கொள்ளுங்கள்.

* மூன்று இலைகளை எடுத்துக்கொள்ளுங்கள்.

* மூன்று இலைகளிலும் மூன்று நிறச்சாயத் துளிகளை இட்டு குவளை நீரில் மிதக்க விடுங்கள்.

* கூர்ந்து சிறிது நேரம் அவதானியுங்கள்.


* நீர்க் குவளையினுள் தோன்றும் வண்ணக்

கோலங்களை அவதானியுங்கள்

www.Ikea

செயலட்டை – 9

வினாக்களுக்கு விடை தருக.



நூல் விபரம்

நூல் தலைப்பு	:	சிறுவர் செந்தமிழ்
ஆசிரியர்	:	க.சோமசுந்தரப் புலவர்
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	2004
உரிமை	:	ஆசிரியருக்கு
பக்கங்கள்	:	164
எழுத்தளவு	:	12 புள்ளி
நூலின் விலை	:	ரூ.120.00

நூலின் பெயர் : .....

நூலாசிரியர் பெயர் : .....

புத்தகத்தின் விலை : .....

புத்தகத்தின் பக்கங்கள் : .....

புத்தகத்தைப் பற்றிய சிறு குறிப்பு : .....

.....

.....

.....

www.lk

செயலட்டை – 10

பொருமைக்கும் நற்பண்பிற்கும் கிடைத்த பரிசு

1) கிராமத்து மக்கள் ஏன் பசியால் வாடினர்?

.....

2) சிறுவனின் உணவுப் பொதியில் இருந்தது என்ன?

.....

3) சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குக.

புறப்பட்டான் / சிறுவன் / பொதியை/ உணவுப் / எடுத்துக்/ கொண்டு

.....

4) ஒத்த சொல்லை எழுதுக.

1. ஆண்டுகளாக _____ 2. உள்ளம் _____

3. தினமும் _____ 4) மகிழ்ச்சியுடன் _____

5. வீட்டிற்கு _____

5) பொருத்தமான சொல்லை கோட்டில் எழுதுக

1. பொறுமைக்கும் நற்பண்பிற்கும் திடைத்த பரிசே _____ காசுகள்.
(வெள்ளி, தங்கம்)

2. ஊரில் உள்ளவகள் _____வாடினர்.
(பசியால், தாகத்தால்)

1) தங்கக்காசுகள் என்பதை பிரித்தெழுதுக _____+_____

7) பின்வரும் சொற்கள் குறிக்கும் காலத்தை எழுதுக.

1. நிகழ்ந்தது _____ 2. செய்வார் _____

8) பின்வரும் சொற்கள் குறிக்கும் இடத்தை எழுதுக.

1) உன் _____ 2) சிறுவன் _____

3) அவர் _____ 4) நான் _____

www.lkedu.lk

செயலட்டை – 11



புதன் (Mercury)

இது சூரியனுக்கு பக்கத்திலேயே இருப்பதால் மிகவும் சூடாக இருக்கிறது. இதன் வெப்ப அளவு 800 டிகிரி பாரன் ஹீட். சூரியனில் இருந்து 57.91 மில்லியன் கி.மீ. தூரத்தில் (Distance) இருக்கிறது. (ஒரு மில்லியன் என்பது பத்து லட்சம்) இரவில் மைனஸ் 209 டிகிரி பாரன் ஹீட் அளவிற்கு கடுமையாகக் குளிர்ந்திருக்கும்.

வெள்ளி (Venus)

சூரியனைச் சுற்றி வர 225 நாட்கள் எடுத்துக் கொள்கிறது. தன்னைத்தானே சுற்றிவர 243 நாட்கள். சூரியனுக்கும், வெள்ளி கோளுக்குமான இடைவெளி 108.2 மில்லியன் கி.மீ. பார்ப்பதற்கு பிங்க் நிறத்தில் இருக்கும். வெள்ளிதான் சூரியக் குடும்பத்தில் மிகவும் வெப்பமான கோள். இதற்கு ஈவ்னிங் ஸ்டார் என்று ஒரு பெயர் உண்டு. சூரியன் மறையும் போது வானத்தில் மேற்கில் பார்க்கலாம்.

பூமி (Eath)

சூரியக் குடும்பத்தில் மூன்றாவது கோள், நீலக்கோள் என்றும் அழைக்கப்படுகிறது. உயிரினங்கள் வாழக்கூடிய ஒரே கோள். சுமார் 4.6 பில்லியன் வருடங்களுக்கு முன் தோன்றியது. தன்னைத்தானே சுற்றுவதற்கு 24 மணி நேரமும், சூரியனைச் சுற்றிவர 365.24 நாட்களும் எடுத்துக்கொள்கிறது. சூரியனில் இருந்து 149.6 மில்லியன் கி.மீ தூரத்தில் இருக்கிறது.

செவ்வாய் (Mars)

சிவப்பு நிறத்தில் உள்ள கோள். இந்தக் கோள் சூரியனில் இருந்து 227.9 மில்லியன் கி.மீ தூரத்தில் இருக்கிறது. இங்கு கார்பன் டை ஆக்சைடு (Carbon Di oxide) வாயு அதிகம் நிறைந்துள்ளது. மலைகள் நிறைந்துள்ளன. செவ்வாயில் உள்ள கனிம வளங்கள் குறித்து ஆய்வு செய்யவும். மனிதர்கள் வாழ தகுதி உள்ளதா என்பதை அறியவும். இந்தியா, மங்கள்யான் விண்கலத்தை அனுப்பியது. கடந்த 2014 ம் ஆண்டு செப்டம்பரில் இந்திய விண்வெளி ஆய்வு மையம் இஸ்ரோட் மங்கள்யானை விண்ணுக்கு அனுப்பியது.

வியாழன் (Jupiter)

மற்ற எல்லா கோள்களை விடவும் மிகப் பெரியது. மற்ற கோள்களை சேர்த்தால் வரும் எடையை விட, இரண்டு பங்கு பெரியது. பூமியை விட 1,300 மடங்கு பெரியது. சூரியனில் இருந்து 778.5 மில்லியன் கி.மீ தூரத்தில் இருக்கிறது. பூமியில் ஏற்படும் ஒரு பெரும் புயலை விடவும், வியாழனில் ஆறு மடங்கு அதிகமாக புயுல் வீசும். 67 (துணைக்கோள் Natural satellites) நிலாக்கள் வியாழனுக்கு துணையாக இருக்கின்றன.

சனி (Satrun)

சனி, சூரியனில் இருந்து 1.429 பில்லியன் கி.மீ இடைவெளியில் உள்ளது. (ஒரு பில்லியன் நூறு கோடி) மிகவும் அழகான கோள் என்று அழைக்கப்படுகிறது. கணக்கிடவே முடியாத பனிக்கட்டிகளும், தூக படலமும் நிறைந்துள்ளது. இந்தக் கோளுக்கு 62 குட்டி நிலாக்கள் உள்ளன.

யூரேனஸ் (Uranus)

இப்படி ஒரு கோள் இருப்பதாகவே முதலில் விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கவில்லை. 1781 ல் தான் யூரேனஸ் விஞ்ஞானிகளால் கண்டறியப்பட்டன. சூரியனுக்கும். யூரேஸ்க்குமான இடைவெளி 4.498 பில்லியன் கி.மீ இந்தக் கோளைச் சுற்றி அடர்ந்த கடல் நீலம் கொண்ட மீத்தேன் வாயு நிரம்பி உள்ளதால் நீல நிறமாகக் காட்சி தருகிறது. 27 துணை நிலாக்கள் யூரேனஸ்க்கு உண்டு.

நெப்டியூன் (Naptune)

சூரியனுக்கும், நெப்டியூனுக்கும் 4.498 பில்லியன் கி.மீ இடைவெளி உள்ளது. இதுவும் நீல நிறக்கோள்தான். 1846ல் இந்தக் கோள் கண்டு பிடிக்கப்பட்டது. சூரியனை ஒரு முறை சுற்றி வர 164 வருடங்கள் எடுத்துக்கொள்கிறது. எப்பொழுதும் 346 டிகிரி வெப்ப நிலையிலேயே உறைந்து இருக்கிறது.

புளுட்டோ (Pluto)

சூரியனுக்கு அப்பால் 3.67 பில்லியன் கி.மீ தூரத்தில் இருக்கிறது. குறுங்கோள் (Dwarf) என்று அழைக்கப்படுகிறது. மைனஸ் 364 டிகிரி பாரன் ஹீட்டில் இக்குறுங்கோல் இருக்கும். மற்ற எட்டுக்கோள்களை விட இங்குதான் குளிர்ச்சி அதிகம். 1930 ல் புளுட்டோ கண்டு பிடிக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டு நடந்த சர்வதேச வானியல் ஆய்வுக் கழகம் புளுட்டோவை சூரிய மண்டபத்தில் ஒரு கோளாகச் சேர்க்கக்கூடாது என்று கூறி, குறுங்கோளாக அறிவித்தது.

புதிதாக நெப்டியூன் (Naptune) கோளுக்கு அப்பால், பூமியை விட பத்து மடங்கு அதிக எடை கொண்ட, ஒரு புதிய கோள் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்து இருக்கிறார்கள். அதற்கு பிளானட் 9 (Planet 9) என்று தற்காலிகமாக பெயர் வைத்திருக்கிறார்கள்.

01) தொடர்புபடுத்துவோம்

1. புதன்	வெள்ளி
2. செவ்வாய்	24 மணித்தியாலம்
3. புவியின் துணை நிலா	மிகச் சிறிய கோள்
4. வெப்பமான கோள்	சனி கோள்
5. மிகப்பெரிய கோள்	சிவப்பு நிறக் கோள்
6. அழகான கோள்	நீள்வட்டப்பாதையில்
7. புவி ஒரு முறை தன்னைத் தானே சுற்ற எடுக்கும் காலம்	சந்திரன்
8. குறுங்கோள்	வியாழன்
9. 1781 ல் கண்டுபிடிக்கப்பட்டது	புளூட்டோ
10. கோள்கள் சூரியனைச் சுற்றுவது	யுரேனஸ்

2) விடை எழுதுவோம்.

1. உயிரினங்கள் வாழக்கூடிய கோள் எது?

.....

2. பூமி சூரியனை ஒரு முறை சுற்றிவர எடுக்கும் காலம் எவ்வளவு?

.....

3. ஈவ்னிங் ஸ்டார் என அழைக்கப்படும் கோள் எது?

.....

www.lkedu.lk

செயலட்டை – 12

பயிற்சி - 1

பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியாயின் 'சரி' எனவும் பிழையாயின் 'பிழை' எனவும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. எனது பூந்தோட்டத்தில் அழகான பூக்கள் பூத்துள்ளன. (.....)
2. மான் கூட்டம் சிதறி ஓடின. (.....)
3. ஒவ்வொரு புத்தகமும் நல்லது. (.....)
4. தாலாட்டுப் பாடல்கள் இனிமையானவை. (.....)

பயிற்சி - 2

சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. தொழிலாளி , தொளிலாளி , தொழிலாளி , தொளிலாழி
2. முயற்சி , முயச்சி , முயற்ச்சி , முயற்சி
3. ஆராச்சி , ஆராய்ச்சி , ஆராட்சி , ஆராய்சி
4. நட்ச்சத்திரம் , நட்சத்திரம் , நச்சத்திரம் , நட்சத்திறம்

பயிற்சி - 3

பின்வரும் ஒவ்வொரு சொற் கூட்டங்களுள் எந்தச் சொல் வேறுபட்டது எனக் கண்டுபிடித்து அச்சொல்லைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. மை, பேனா, மலர், புத்தகம், பென்சில் (.....)
2. பாடகன், அம்மா, அப்பா, அக்கா, அண்ணன் (.....)
3. மயில், குருவி, மரை, குயில், காகம் (.....)
4. மரம், மான், வேர், கிளை, தண்டு (.....)

www.lkedu.lk

பயிற்சி - 4

பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

1. உனக்குச் சிலந்தியைப் பற்றித் தெரியுமா
2. ஐயோ வழுக்கி விட்டதே
3. ஐயா உங்களுக்கு நீச்சல் தெரியுமா
4. ஐயோ எனக்கு நீச்சல் தெரியாதே

செயலட்டை – 13

பயிற்சி - 1

பின்வரும் பிராணிகளின் இளமைப் பெயர்களைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. ஆட்டுக்..... 2. கீரிப்.....
3. குதிரைக்..... 4. புலிக்.....
5. அணிற்..... 6. நாய்க்.....
7. மான்..... 8. குரங்குக்.....

பயிற்சி - 2

பின்வரும் வாக்கியங்களில் புள்ளிக் கோடிட்டு இடங்களுக்குப் பொருத்தமான சொற்களை கட்டத்திற்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

மெதுவாக, தெளிவாக, அமைதியாக, நகைச்சுவையாக, சரியாக

1. அவர் ..... நடந்து வைத்தியசாலைக்குச் சென்றார்.
2. தாத்தா எதுவும் பேசாமல் ..... இருந்தார்.
3. நாம் எப்போதும் சொற்களைச் ..... உச்சரிக்க வேண்டும்.
4. அப்பா, எந்த முடிவை எடுத்தாலும் அது ..... இருக்கும்.

www.lkedu.lk

பயிற்சி - 3

கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

1. நேற்று மலை பெய்தது.
   .....
2. மிளகாய்ச் செடி செளித்து வளர்ந்தது.
   .....
3. நான் மனல் வீடு கட்டினேன்.
   .....
4. அது நல்ல யோசணை என்று நினைத்தார். .....

பயிற்சி - 4

பின்வரும் சொற்களில் எதிர்பாற் சொற்கள் அல்லாத சொல்லின் கீழ்க் கோடிடுக.

1. அரசன், மந்திரி, அரசி, தம்பி, தங்கை
2. தேவன், தம்பி, தங்கை, நடிகன், நடிகை
3. உத்தமன், உத்தமி, தமையன், மகள், மகன்
4. சிறுவன், புதல்வன், புதல்வி, புத்திரன், புத்திரி
5. மேலோன், நல்லவன்,நல்லவள், பாட்டன், பாட்டி

செயலட்டை – 14

பயிற்சி - 1

பின்வரும் பிராணிகளின் ஒலிகளை கட்டங்களுக்குள் எழுதுக.

பிராணிகள்	ஒலிகள்	பிராணிகள்	ஒலிகள்
மயில்		காகம்	
ஆந்தை		நரி	
யானை		சிங்கம்	

www.ikedu.lk

பயிற்சி - 2

பின்வரும் பந்தியை வாசித்து வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

மாதவன் காலையில் வகுப்பிற்கு வந்த போது அங்கு வேறு எவரும் வந்திருக்கவில்லை. புத்தகப் பையை மேசை மீது வைத்துவிட்டு அவன் துடைப்பத்தை எடுத்து வகுப்பைச் சுத்தம் செய்யத் தொடங்கினான். அதன் பின்னர் வந்த பீற்றர் அவனுக்கு உதவி செய்தான். அடுத்ததாக வந்த சாந்தி பூச்சாடியிலிருந்த பூக்களை அகற்றி விட்டு புதிய பூக்களைச் செருகினாள். அதன் பின்னர் வந்த கரீம் மேசைகளையும் கதிரைகளையும் ஒழுங்குபடுத்தி வைத்தான்.

01. மாதவன் காலையில் வகுப்பிற்கு வந்த போது வகுப்பிலிருந்தவர் யார்?

1. சாந்தி 2. கரீம் 3. பீற்றர் 4. ஒருவருமில்லை

02. வகுப்பைச் சுத்தம் செய்தவர் யார்?

1. பீற்றர் 2. சாந்தி 3. மாதவன் 4. கரீம்

03. வகுப்பைச் சுத்தம் செய்வதற்கு உதவியவர் யார்?

1. சாந்தி 2. பீற்றர் 3. கரீம் 4. ஒருவருமில்லை

04. பூச்சாடியை ஒழுங்கு செய்தவர் யார்?

1. சாந்தி 2. மாதவன் 3. பீற்றர் 4. கரீம்

மேலே தரப்பட்ட பந்தியை மீண்டும் வாசித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1. மேசைகளையும் கதிரைகளையும் ஒழுங்குபடுத்தியவர் யார்?

.....

2. முதலில் வந்தவர் யார்?

.....

3. அடுத்ததாக வந்தவர் யார்?

.....

4. கடைசியாக வந்தவர் யார்?

.....

www.lkedu.lk


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER
zoom
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

பயிற்சி - 3

கீழே தரப்பட்டுள்ள சொற்கள் இரண்டு சொற்களினால் ஆக்கப்பட்டவை. ஆனால் அவற்றின் முதல் எழுத்துக்கள் மாறியுள்ளன. சரியான சொல்லை ஆக்கிப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. பாதிய புதை .....
2. உலை மச்சி .....
3. மொய் தாழி .....
4. வெயல் வளி .....
5. குன் மாட்டி .....
6. வீர் நீழ்ச்சி .....
8. ஆடல் கமை .....
9. காடி கரம் .....
10. மனை பரம் .....

பயிற்சி - 4

பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

சித்திரை வந்தால் வசந்தம் பிறக்கும்
வண்ண வண்ணப் பூக்கள் எங்கும்
கொத்துக் ..... மலர்ந்து பொலியும்
இக்காட்சிதனைக் காணக் களிப்புடன் வாரீர்
பூக்களில் வண்டுகள் தேன் குடிப்பதைப் பாரீர்
மகிழ்வுடன் கீதம் இசைப்பதைக் கேளீர்
சிறகடித்து எழுந்து அங்கும் இங்கும்
செல்வதைப் பாரீர் அதோ செல்வதைப் பாரீர்.

www.lkedu.lk

மேலே தரப்பட்ட பாடலை வாசித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வண்ண வண்ணப் பூக்கள் என்பதன் கருத்து யாது?

.....

2. வண்டுகள் எவற்றின் மீதிருந்து கீதம் இசைக்கின்றன?

.....

3. முதற்கவிதையில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான ஒரு சொல்லை எழுதுக.

.....

4. சந்தோசமாக என்னும் கருத்தைத் தரும் இரு சொற்கள் இவ்விரு கவிதைகளிலும் உள்ளன. அந்த இரு சொற்களும் யாவை?

.....

செயலட்டை – 15

பயிற்சி - 1


கீழே தரப்பட்டுள்ள சொற்கள் இரண்டும் சொற்களினால் ஆக்கப்பட்டவை. ஆனால் அவற்றின் முதல் எழுத்துக்கள் மாறியுள்ளன. சரியான சொல்லை ஆக்கிப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. பாதிய புதை .....
2. உலை மச்சி .....
3. மொய் தாழி .....
4. வெயல் வளி .....
5. குன் மாட்டி .....
6. வீர் நீழ்ச்சி .....
7. ஆடல் கமை .....
8. காடி கரம் .....
9. மனை பரம் .....

www.lkedu.lk

செயலட்டை – 16

பின்வரும் குறுக்கெழுத்து அட்டவணையை பூரணப்படுத்துக.



இடமிருந்து வலம்

1. இவற்றுக்கு இறகுகள் உள்ளன.
4. வீட்டினுள்ளே வெளிச்சத்தையும் காற்றையும் தருவதற்காகச் சுவரிலே வைத்துக் கட்டப்படுவது.
5. வாரத்தில் பாடசாலை ஆரம்பிக்கும் முதல் நாள்.
6. சோற்றுடன் சேர்த்து உண்ணுவது.
7. கைது செய்யப்பட்டவர்.
8. பூக்களில் இது தேனைக் குடிக்கும்.


மேலிருந்து கீழ்

1. அன்றாட செய்திகளை வாசித்து அறிய உதவுவது.
2. உலகம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
3. உணவை மென்று உண்ண உதவுவது.
6. இதனால் நாம் பார்க்கிறோம்.

www.lkedu.lk

செயலட்டை – 17

காட்சிப்படத்தைப் பார்த்து நிகழ்காலத்தில் நான்கு வாக்கியங்கள் எழுதுக.



1. .....

.....

2. .....

.....

3. .....

.....

4. .....

.....

www.ikeja.lk

கணிதம்

தரம் - 04


01) எண்களை ஏறுவரிசைப்படுத்துக.

1. 3026, 2318, 1695, - .....
2. 5275, 5603, 5914, - .....
3. 4262, 2108, 8245 - .....
4. 2477, 7432, 5531 - .....
5. 3450, 8271, 4500 - .....

02) கூட்டுக.

1.	2.	3.	4.
3041	1227	3022	4325
+ 1508	+ 1302	+ 1048	+ 1434
4221	1244	2510	2242
☐	☐	☐	☐

03) பின்வரும் எண்களை கொண்டு விடை தருக.



1. A யில் உள்ள மிகப்பெரிய எண்ணையும் B இல் உள்ள மிகச் சிறிய எண்ணையும் கூட்டும் போது கிடைக்கும் எண் யாது?

   .....

2. 744 உடன் B யில் உள்ள எந்த எண்ணைக் கூட்டினால் 1280 விடையாகக் கிடைக்கும்?

   .....

3. A யில் உள்ள மிகச் சிறிய எண்ணையும் B யில் உள்ள மிகச் சிறிய எண்ணையும் கூட்டினால் கிடைக்கும் எண் யாது?

   .....

www.ikeau.lk

04) குறிப்பிட்ட 3 தினங்களில் லொத்தர் சீட்டுக்களின் விற்பனை பற்றிய விபரம் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

நகரம்	1ஆம் நாள்	2ஆம் நாள்	3ஆம் நாள்	மொத்தம்
A	1435	2125	1374	
B	1062	1761	2020	
C	2280	2535	3575	
மொத்தம்				

1. மேலே உள்ள அட்டவணையை பூர்த்தி செய்க.
2. நகரம் **A** யில் 1ஆம் நாள் மற்றும் 3ஆம் நாள் விற்பனை செய்யப்பட்ட மொத்த சீட்டுக்கள் எத்தனை?

   .....
3. 3 தினங்களிலும் விற்பனை செய்யப்பட்ட மொத்த சீட்டுக்களின் எண்ணிக்கை யாது?

   .....
4. **A** மற்றும் **C** நகரங்களில் 3 தினங்களிலும் விற்பனை செய்யப்பட்ட மொத்த சீட்டுக்களின் எண்ணிக்கை யாது?

   .....
5. அதிகளவில் லொத்தர் சீட்டுக்களின் விற்பனை செய்யப்பட்ட நகரம் எது?

   .....
6. அதிகளவில் லொத்தர் சீட்டுக்களின் விற்பனை செய்யப்பட்ட நாள் எது?

   .....
7. குறைவான லொத்தர் சீட்டுக்களின் விற்பனை செய்யப்பட்ட நாள் எது?

   .....
8. ஒரு சீட்டின் விலை ரூபாய் 10ஆயின் நகரம் **A** யில் 1ஆம் நாள் விற்கப்பட்ட சீட்டுக்களின் பெறுமதி யாது?

   .....

www.ikedu.lk

05) அட்டவணையை அவதானித்து விடை எழுதுக.

மாணவர்கள் விரும்பும் பழங்கள்	மாணவர் எண்ணிக்கை	மொத்தம்
வாழைப்பழம்		45
அன்னாசி		56
மாம்பழம்		50
கொய்யாப் பழம்		37
பலாப்பழம்		37

1. மேலே உள்ள அட்டவணைக்கு வரவுக்குறி இட்டு பூரணப்படுத்துக.
2. அதிக மாணவர்கள் விரும்பும் பழம் யாது?
   .....
3. சம எண்ணிக்கையான மாணவர்கள் விரும்பும் பழம் யாது?
   .....
4. கொய்யாப் பழத்தை விட அன்னாசியை எத்தனை மாணவர்கள் கூடுதலாக விரும்புகின்றனர்?
   .....
5. பழங்களை விரும்பும் மொத்த மாணவர்கள் தொகை யாது?
   .....

06) பிரசினம் தீர்க்க

1. கமலாவிடம் 46 மாம்பழங்கள் இருந்தன. அவற்றில் 23 ஐ பாமாவிற்கு கொடுத்தால் கமலாவிடம் எஞ்சியுள்ள மாம்பழங்கள் எத்தனை?
   கமலாவிடம் இருந்த மாம்பழங்களின் எண்ணிக்கை =
   பாமாவிற்கு கொடுத்த மாம்பழங்களின் எண்ணிக்கை =
   எஞ்சியுள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை = ☐
2. ஒரு வாழை குலையிலுள்ள காய்களினதும் பழங்களினதும் மொத்த எண்ணிக்கை 123 ஆகும்.அதிலுள்ள பழங்களின் எண்ணிக்கை 74
   ஆகவே காய்களின் எண்ணிக்கை யாது?
   வாழை குலையிலுள்ள கர்ய்களினதும் பழங்களினதும் எண்ணிக்கை =
   பழங்களின் எண்ணிக்கை =
   ஆகவே காய்களின் எண்ணிக்கை = ☐

www.ikedu.lk

07) விடை காண்க.

1. 150.00 ரூபாய்க்கு பொருள் ஒன்றை வாங்கிய ஒருவர் கடைக்காரருக்கு அத்தொகையை மூன்று நாணயத் தாள்களாகவும் ஒரு நாணய குற்றியாகவும் வழங்கினார்.அவர் வழங்கிய மூன்று நாணயத் தாள்களையும் நாணய குற்றியையும் எழுதுக.

   .....

2. ஒரு மேசையின் நீளம் 4m 36cm ஆகும்.அதன் அந்தத்தில் 2m 45cm நீளமுள்ள வேறொரு மேசை வைக்கப்பட்டுள்ளது.இரு மேசைகளினதும் மொத்த நீளம் யாது?

   .....

3. ஒரு பயிற்சி புத்தகத்தின் விலை ரூ.75ஆகும்.என்னிடம் ரூ 46 உள்ளது.பயிற்சி புத்தகத்தை வாங்க இன்னும் எவ்வளவு பணம் தேவை?

   .....

4. ஒரு தூணுக்கு 2 கொடிகள் வீதம் 92 கொடிகளைக் கட்டுவதற்கு தேவையான தூண்களின் எண்ணிக்கை யாது?

   .....

5. ஒரு பரிசுப் பொதியில் 6 புத்தகங்கள் வீதம் 46 பொதிகளைச் செய்வதற்கு எத்தனை புத்தகங்கள் தேவை?

   .....

08) எண் பெயருக்குப் பொருத்தமான உரோம எண்ணை எழுதுக


1. ஏழு -.....
2. ஐந்து - .....
3. ஒன்பது - .....
4. இரண்டு - .....
5. எட்டு -.....
6. பத்து - .....
7. ஒன்று -.....
8. மூன்று -.....
9. ஆறு -.....
10. நான்கு -.....

www.ikedu.lk

09)

×	7	5	10	9
7				
5				

10) வெவ்வேறு திரவ அளவுடைய பாத்திரங்களை அவதானித்து விடை தருக.



1. A பாத்திரத்தை விட C பாத்திரத்தில் எவ்வளவு நீர் கூடுதலாக உள்ளது?

   .....

2. A பாத்திரத்தினதும் B பாத்திரத்தினதும் மொத்த கொள்ளளவு யாது?

   .....

3. கூடியளவு நீரைக் கொண்ட பாத்திரம் எது?

   .....

4. C பாத்திரத்தை நிரப்புவதற்கு B பாத்திரத்தால் எத்தனை தடவை நீர் ஊற்ற வேண்டும் ?

   .....

5. திரவத்தை அளக்கும் நியம அலகு எது?

   .....

www.ikeda.lk

தரம் -04

சுற்றாடல் சார் செயற்பாடுகள்

---

01) மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. நேரசூசி ஒன்றின் அடிப்படையில் வேலைகளைச் செய்வதனால் பெறும் பயன் எது?
   (1) சிரமங்கள் ஏற்படும் (3) மன அமைதி கெடும்
   (2) நேரவிரயம் தவிர்க்கப்படும்
2. விவசாயிகள் வேலைகளை இலகுபடுத்த பயன்படுத்தும் தொழிநுட்ப உபகரணம் ஒன்று
   (1) மண்வெட்டி (2) நெல் அறுவடை இயந்திரம் (3) கலப்பை
3. இவ்வுபகரணத்தை பயன்படுத்துவோர் யார்?
   (1) கொல்லன்
   (2) மீனவன்
   (3) விவசாயி



4. மண்ணை வளமாக்க உதவும்
   (1) மட்டைத்தேள் (2) மரவட்டை (3) மண்புழு
5. கதவொன்றின் அலங்கார செதுக்கல் வேலைகளைச் செய்ய உதவுவது
   (1) உளி (2) கைவாள் (3) துறப்பணம்
6. அலங்கார தையல் வகைக்குள் அடங்காத தையல் வகை
   (1) சங்கிலித்தையல் (2) சோம்தையல் (3) கம்பளித்தையல்
7. விற்றமின் A குறைப்பாட்டினால் ஏற்படத்தக்க நோய்
   (1) வாந்திபேதி (2) மாலைக்கண் (3) குருதிச்சோகை
8. மனிதனின் தவறான செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் விபத்து அல்லாதது
   (1) மின்சாரம் தாக்குதல் (2) வாகனங்களில் மோதுதல் (3) காட்டுத்தீ

02) இடைவெளி நிரப்புக.

வெசக் , தொற்று நோய்கள் , பம்பரகந்த , பௌர்ணமி , நத்தார்

1. பக்றீரியா , வைரஸ் போன்ற கிருமிகளே ..... பெருக முக்கிய காரணமாகும்.
2. சிங்களவர்கள் வெளிச்சக்கூடுகளும், தோரணங்களும் அமைத்து ..... கொண்டாடுவார்கள்.
3. இலங்கையின் மிகவும் உயரமான நீர்வீழ்ச்சி .....

www.ikedu.lk

4. கிறிஸ்தவர்கள் டிசம்பர் மாதத்தில் …….. பண்டிகை கொண்டாடுவர்.
5. …….. தினத்தில் வானில் சந்திரனை மிகப்பெரியதாகப் பார்க்க முடியும்.

03) நீர் சுழலி ஒன்றைத் தயாரிக்க தேவைப்படும் உபகரணங்கள் எவை?

1. ……..
2. ……..
3. …….
4. ……

04) சரி பிழை கூறுக.

1. எமது அன்றாட வேலைகளை நாமே செய்வது சிறந்ததாகும் ( )
2. நாம் பாதையில் இடது புறத்தில் நடந்து செல்ல வேண்டும் ( )
3. ஒளிசமிக்ஞை விளக்கில் சிவப்பு நிற மின்குமிழ் ஒளிர்ந்தால் வாகனத்தை நிறுத்தக் கூடாது. ( )
4. உடையில் பட்ட தார் கரையை அகற்றுவதற்கு மண்ணெண்ணெய் உகந்தது. ( )
5. அசுத்த நீரை பருகுவதால் வாந்திபேதி நோய் ஏற்படும் ( )

05) பின்வரும் உபகரணங்களின் பெயர்களையும் அதன் பயன்களையும் எழுதுக.



…….. ……

……..

……..



……

……..

……..

www.lkedu.lk



…….. ……

……..

……..



……..

……

……..

06) சுருக்கமான விடைத் தருக.

1. இரசாயன பசளைகளின் பயன்பாடுகள் சூழலில் ஏற்படுத்தும் மாற்றங்கள் 2 தருக.
   (1) ……
   (2) ……..
2. வேலைகளை திட்டமிட்டு செய்வதால் கிடைக்கும் நன்மைகள் 2 தருக.
   (1) ……
   (2) ……..
3. இலைகள் மூலம் புதிய கன்றுகளை பெறக் கூடிய தாவரங்கள் 2 தருக.
   (1) ……
   (2) ……..
4. போத்தலில் அடைத்து நீண்ட காலம் பேணும் உணவுப் பொருட்கள் 2 தருக.
   (1) ……
   (2) ……
5. வீட்டுத் தோட்டச் செய்கைக்கு உதவும் உபகரணங்கள் 4 தருக.
   (1) …… (3) ……
   (2) …… (4) ……
6. தண்டுகளை நட்டு கன்றுகளை பெறத்தக்க தாவரங்கள் 4 எழுதுக.
   (1) …… (3) ……
   (2) …… (4) ……

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

7. காற்றின் மூலம் பரம்பலடையும் வித்துக்கள் 4 எழுதுக.
   (1) ..... (3) .....
   (2) ..... (4) .....
8. முற்காலத்தில் வேலைகளை இலகுபடுத்திக் கொள்ள பயன்படுத்திய உபகரணங்கள் 4 எழுதுக.
   (1) ..... (3) .....
   (2) ..... (4) .....
9. கூட்டாக வேலை செய்வதால் கிடைக்கும் நன்மைகள் 4 எழுதுக.
   (1) ..... (3) .....
   (2) ..... (4) .....
10. மழை நீரினால் கிடைக்கும் நன்மைகள் 4 எழுதுக.
   (1)..... (3) .....
   (2) ..... (4) .....

www.lkedu.lk